**விண்ணப்பங்கள் கோருவதற்கான அறிவித்தல்** இணைப்பு 01

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## இலங்கை பொறியியலாளர் சேவையின் I ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களை விசேட தரத்துக்கு பதவியுயர்த்தல்

இலக்கம் 1836/6 மற்றும் 2013/11/11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் இலக்கம் 2190/26 மற்றும் 2020.08.25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட 6 ஆவது திருத்த ஏற்பாடுகளின் படி மற்றும் இலக்கம் 2233/27 மற்றும் 2021.06.23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட 7 ஆவது திருத்த ஏற்பாடுகளின் படி 2021.06.30 ஆந் திகதிக்கு விசேட தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கான தகைமையுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*பின்வரும் பதவிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பாதிருக்க அரசாங்க சேவை ஆணைக்குழுக்கு அதிகாரமுண்டு.*

| தொடரில க்கம் | விசேட தரத்தின் பதவிகள் | அமைச்சு / திணைக்களம் | பதவி உரித்தாகும் வகுதி | வெற்றிடமாகக் கருதப்படும் திகதி |
|---|---|---|---|---|
| 1 | பிரதி பிரதம செயலாளர் (பொறியியலாளர் சேவை) | தென் மாகாண சபை | சிவில் -07 | 2020.08.27 |
| 2 | மேலதிகச் செயலாளர் (நீர்ப்பாசன அபிவிருத்தி) | கிராமிய வயல்கள் மற்றும் அது சார்ந்த குளங்கள்,நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | சிவில் 03 | 2020.08.27 |
| 3 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | கைத்தொழில் அமைச்சு | சகல இயந்திர | 2020.09.04 |
| 4 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | மின்சக்தி அமைச்சு | சகல மின் | 2020.09.04 |
| 5 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | நீர்ப்பாசன அமைச்சு | இயந்திர -01 | 2020.09.04 |
| 6 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | விவசாய அமைச்சு | சகல வகுதி | 2020.09.04 |
| 7 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | கடற்றொழில் அமைச்சு | சகல வகுதி | 2020.09.04 |
| 8 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு | சகல சிவில் | 2020.09.04 |
| 9 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | தோட்ட வீடமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு | சகல சிவில் | 2020.09.04 |
| 10 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | கிராமிய வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கட்டிட பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு | சகல சிவில் | 2020.09.04 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | கிராமிய வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கட்டிட பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு ( **மீள்குடியேற்றப் பிரிவு)** | சகல சிவில் | 2020.09.04 |
| 12 | பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) | கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு | சகல சிவில் | 2020.09.04 |
| 13 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு,விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு | சகல வகுதி | 2020.09.04 |
| 14 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்து போக்குவரத்துச் சேவைகள்,புகையிரதப் பெட்டிகள், மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு | சகல இயந்திர மற்றும் சகல மின் | 2020.09.04 |
| 15 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு | சகல வகுதி | 2020.09.04 |
| 16 | பணிப்பாளர் நாயகம் ( பொறியியல்) | வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | சகல வகுதி | 2020.09.04 |
| 17 | மேலதிககச் செயலாளர் - ( தொழில்நுட்பம்) | கிராமிய வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் கட்டிட பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு | சிவில் -01 | 2020.10.01 |
| 18 | பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) | நகர அபிவிருத்தி, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமூக துப்பரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு | சகல வகுதி | 2020.10.02 |
| 19 | பிரதி பிரதம செயலாளர் (பொறியியலாளர் சேவை) | கிழக்கு மாகாண சபை | சிவில்-07 | 2020.12.15 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | பணிப்பாளர் நாயகம்<br>( நகர அபிவிருத்தி) | நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை மற்றும் சமூக துப்பரவேற்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு | சகல சிவில் | 2021.02.25 |
| 21 | மேலதிகச் செயலாளர்<br>( பெறுகை மற்றும் தொழில்நுட்பம் ) | நீர்ப்பாசன அமைச்சு | சிவில் 03 | 2021.05.30 |
| 22 | பிரதி பிரதம செயலாளர் (பொறியியலாளர் சேவை) | வட மத்திய மாகாண சபை | சிவில் -07 | 2021.06.23 |
| 23 | மேலதிக பொது முகாமையாளர் - ( இயந்திர) | புகையிரத திணைக்களம் | இயந்திர 02 | 2021.06.07 |

02. **விசேட தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவதற்கு பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள்**

I. இலங்கை பொறியியலாளர் சேவையின் முதலாம் தரத்தில் ஐந்து (05) வருடங்களுக்கு முனைப்புடனானதும் திருப்திகரமானதும் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் I ஆந் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டதன் பின்னர் ஐந்து (05) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.

II. பதவியுயர்விற்கான தகைமை பெறும் திகதிக்கு இலங்கை பொறியியலாளர் சேவையில் 18 வருடங்களுக்குக் குறையாத முனைப்பான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

III. பதவியுயர்விற்கான தகைமை பெறும் திகதிக்கு உடன்முன்னரான ஐந்து (05) வருடங்களினுள் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் இருத்தல்.

IV. அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை 1/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாக ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.

V. **(அ.)** இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் அதிஉயர் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு பொறியியலாளர் நிறுவனத்திலிந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அதற்குச் சமனான அதிஉயர் அங்கத்துவத்தினைப் பெற்றிருத்தல். இங்கு பட்டய பொறியியலாளர் நிலையைப் பெற்றுள்ள பொறியியல் துறையில் அதிஉயர் அங்கத்துவத்தைப் பெற்று அவ்வங்கத்துவத்தை தொடர்ச்சியாக பேணுவது கட்டாயத் தேவையாகும்.

அல்லது

**(ஆ.)** 09 மாதங்களுக்குக் குறையாத பாடநெறிக் காலத்துடன் பொறியியல் துறையில் பட்டப் பின் பட்ட டிப்ளோமா / பட்டப் பின் பட்ட தகைமையைப் முழுமைப்படுத்தியிருத்தல் அல்லது முகாமைத்துவ துறையில் அல்லது வணிக நிர்வாகம் தொடர்பான பட்டப் பின் பட்டச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் பட்டய பொறியியலாளர் நிலையை தொடர்ச்சியாக பேணிச் சென்றிருத்தல்.

குறிப்பு :

I. இலங்கை பொறியியல் நிறுவனம் (IESL) தவிர்ந்த வேறு நிறுவனமொன்றில் அதிஉயர் அங்கத்துவத்தைப் பெற்றிருப்பின், அந்நிறுவனம் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

II. இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தில் அதிஉயர் அங்கத்துவத்தை வழங்கிய சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

III. அதிஉயர் அங்கத்துவத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்வதாக உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. **பதவியுயர்த்தப்படும் முறை**

3.1 சேவைப் பிரமாணத்தில் 2190/26 மற்றும் 2020.08.25 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ள 6 ஆவது திருத்தத்தின் படி 10.32 மற்றும் 11.3 ( ஈ) பந்திக்கு ஏற்ப அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் படி சேவை மூப்புநிலையின் அடிப்படையில் பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதால், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் மேற்கொள்ளப்படும் நேர்முகப் பரீட்சையின் பின்னர், சேவை மூப்புநிலை அடிப்படையில் விசேட தரத்துக்கு நியமனம் செய்வதற்கான பரிந்துரைகள் வழங்கப்படும்.

3.2 அந்த நேர்முகப் பரீட்சைக்காக 2021.06.30 ஆந் திகதியில் நிலவும் வெற்றிட எண்ணிக்கையைப் போன்று இரட்டிப்பு மடங்கினை விஞ்சாத வகையில் 10.3.1 இன் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

3.3 இ. பொ. சே. I ஆந் தரத்தில் சேவை மூப்புநிலை ஒழுங்கிற்கு ஏற்ப உத்தியோகத்தர்கள் விசேட தரத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு பதவியுயர்த்தப்படுவார்கள் என்பதோடு 2021.06.30 ஆந் திகதிக்குரிய விசேட தரத்தின் சேவை மூப்புநிலை ஆவணம், அத்திகதிக்கு தரமுயர்த்துவதற்கு தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் பதவியுயர்வுக்கு முன்னர் காணப்பட்ட சேவை மூப்பு நிலை ஒழுங்கிற்கு ஏற்ப தயாரிக்கப்படும்.

04. வெற்றிடம் நிலவிய திகதியாக பதவிக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அவ்வந்த வெற்றிடங்களுக்கான பதவியுயர்வுகள் கிடைக்கப்பெறும் என்பதால் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடும் போது அப்பதவிக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள திகதிக்கு அவசியப்படும் தகைமைகளப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கு ஏற்ப பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதம செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களின் ஊடாக எனக்கு **2021.10.22** ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். அத்திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்விதக் காரணமும் இன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பிழையான தகவல்கள் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. மேற்படி அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கும் வகையில் குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும், தற்போது ஓய்வு பெற்றிருந்தாலும், வெற்றிடம் நிலவிய திகதிக்கு மேற்படி இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப்

பூர்த்தி செய்திருப்பின், தான் ஓய்வு பெற்றுச் செல்லும் திகதிக்கு முன்னரான திகதியொன்றில் ஏற்பட்ட வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.

06. எவரேனும் ஒரு அலுவலர் விசேட தரத்திற்கு பதிவி உயர்த்தப்பட்ட பின்னர் வழங்கப்படும் நியமனத்திற்கு ஏற்பக் கடமையைப் பொறுப்பேற்கத் தவறினால், அது தொடர்பாக இலக்கம் 01/2021 மற்றும் 2021.06.30 ஆந் திகதியுடைய, மற்றும் 01/2021(I) மற்றும் 2021.08.02 ஆந் திகதியுடைய அரச சேவை ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

07. இவ் அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் அறிவித்தல்களுக்கிடையே ஏதேனும் இணக்கப்பாடின்மை இருப்பின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தலே வலுவானதாகவிருக்கும்.

"அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்"



ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

2021.09.17